# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 24.07.2026**

**சி.சி.எண்.124/2024**

**எதிரி ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**அ.சா.2 (பாப்பா) மனுவின் பெயரில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனக்கு மகள் என்றால் சரிதான். என் மகளுக்கும் எனது மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. சம்பவம் பற்றி விபரம் தெரிந்து நான் வீட்டிற்கு வந்து பார்த்தபோது அங்கு எனது மகள் இல்லை என்றால் சரியல்ல. நான் வீட்டிற்கு வந்து பார்க்கும் போது எனது மகள் அங்கு இருந்தார். எனது மகள் குடியிருந்த வீட்டிற்கான வாசல் எந்த திசையை பார்த்து இருந்தது என்றால் வடக்கு திசையை பார்த்த வாசல் இருந்தது. எனது மகள் குடியிருந்த வீட்டிற்கு தெற்கு பக்கத்தில் கழுகுமலை ரோடு இருந்ததா என்றால் இல்லை. எனது மகள் குடியிருந்த வீட்டிற்கு வடக்கு பக்கத்தில் ரோட்டை ஒட்டி ஒரு குளியலறை கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட குளியலறையில் ஒரு தகர கதவு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட தகர கதவு முழுமையாக போடப்படவில்லை என்றாலும், பகுதியாக தான் அந்த கதவு போடப்பட்டுள்ளது என்றாலும், உள்ளே குளிக்கும் நபர் யார் என்று தெரியும் என்றாலும் சரியல்ல. மேற்கண்ட குளியலறைக்கு அருகில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் ஒரு தந்தி போல் கிடந்தது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் சம்ப இடத்திற்கு அருகில் பக்கத்து வீட்டுக்காரரும் அவரது மனைவியும் இருந்தார்கள். சம்பவ இடத்திற்கு

அருகில் மேற்கண்ட காலகட்டத்தில் எந்த நபர்கள் அங்கு இருந்தார்கள் என்று பெயர் குறிப்பிட்டு என்னால் கூற இயலாது என்றால் சரிதான். எனது மருமகன் எனதுமகளை எந்த வார்த்தைகள் கூறி அசிங்கமாக பேசினார் என்ற குறிப்பிட்டு எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது மகளை குத்தியதற்காக எதிரியால் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் கத்தியை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகளை எனது மருமகன் கத்தியால் எவ்வாறு குத்தினார் என்ற போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். போலீசாரிடம் மேற்படி கத்தி ஒப்படைக்கப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கின் சம்பவ நடைபெற்றதாக சொல்லப்படும் காலகட்டத்திற்கு முன்பு எனக்கு எனது மருமகனுக்கும் இடையில் பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை. எனது மருமகன் வேரு ஒரு பெண்ணை திருமணம் செய்தது பற்றி நானும் எனது மகளும் அவருடன் பிரச்சனை செய்து கொண்டோமா என்றால் செய்து கொள்ளவில்லை. எனது மகள் கத்தியால் குத்தப்பட்ட பிறகு அவரது ரத்தம் எங்கு பெருகி கிடந்ததாக நான் சொல்கிறேன் என்றால் குளியலறைக்கும் அருகிலும் எனது மகள் இருந்த வீட்டிற்கு வடபுறம் உள்ள வீட்டிற்கு அருகில் ரத்தம் பெருகிகிடந்தது. எனது மகளின் ரத்தம் கிழமேல் ரோட்டில் பெருகி கிடந்ததா என்றால் இல்லை. ( சாட்சி மீண்டும் தாமாக முன்வந்து கிழமேல் ரோட்டில் சிறிதளவு கிடந்தது என்றும், அதன் பிறகு பிள்ளையார் கோவில் அருகில் நிறைய ரத்தம் கிடந்தது என்றும் கூறினார்). நான் அங்கிருந்து மருத்துவமனைக்கு சென்றபோது என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் சின்னமாரியப்பன், எனது மகன் பெருமாள் மற்றும் 4 – 5 நபர்கள் என்னுடன் மருத்துவமனைக்கு வந்தார்கள். எனது மகளை எனது மருமகன் எந்த வார்த்தைகள் கூறி மிரட்டினார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால்

சரிதான். இவ்வழக்கின் எதிரியான எனது மருமகன் வேறுஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டதால் அதில் காழ்புணர்ச்சி கொண்டு குளியலறையிலிருந்து கீழே விழுந்ததில், எனது மகளுக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிக்கு எதிராக பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது மகள் இருலுந்த வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையில் இந்த நீதிமன்றத்திலிருந்து பழைய பேருந்து நிலையம் இருக்கும் தொலைவு இருக்குமா என்றால் இருக்கும். எனது வீட்லிருந்து எனது மகள் இருக்கும் வீட்டிற்கு வருவதற்கு சுமார் 10 நிமிடங்கள் எடுத்திருக்கும் என்றால் சரிதான். எனது மருமகனும் மகளும் இந்த நீதிமன்றத்திற்கு இவ்வழக்கிற்காக வரும்போது இருவரும் சந்தோஷமாக பேசிக்கொள்வார்கள் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், இவ்வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**<u>ADM COURT, SANKARANKOVIL</u>**

**தேதி 24.07.2026**

**சி.சி.எண்.124/2024**

**எதிரி ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>அ.சா.7(அகிலாண்டபாரதி) மனுவின் பெயரில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல்விசாரணையில் கூறிய காயம் ஒரு நபர் தகர கதவில் மல்லாக்க விழுவதால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் காயம் ஆழமாக உள்ளதால் வாய்ப்பில்லை. கீழே கிடக்கும் தந்தி போலின் முகப்பு பகுதியின் மேல் ஒரு நபர் விழுந்தால் நான் முதல் விசாரணையில் கூறிய காயம் அவருக்கு ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பில்லை. கூர்மையான ஒரு கல்லின்மேல் ஒரு நபர் விழுவதால் மேற்கண்ட காயம் அவருக்கு ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் இல்லை. கூர்மையான உடைந்த பீங்கான் மீது ஒரு நபர் விழுந்தால் அவருக்கு மேற்கண்ட காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் இல்லை.

**மறு விசாரணை இல்லை.**